தினமணி

ஆரோக்கிய வாழ்க்கை முறைக்கான அவசியக் கூறுகள்: ஜிப்மர் மருத்துவ கலந்துரையாடலில் விளக்கம்

புதுச்சேரி, செப். 8: ஆரோக்கியவாழ்க்கை முறைக்கான அவசியக் கூறுகள் குறித்து புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் நடைபெற்ற கலந்துரையாடலில் விளக்கப்பட்டது (படம்).

குடல் அழற்சி நோயாளிகளுக்கான நலவழி காட்டல் மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை ஜிப்மரில் நடைபெற்றது. ஜிப்மர் இரைப்பை குடலியல் மருத்துவத் துறை சார்பில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

சிகிச்சையை முறையாகப் பின்பற்றுதல், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைப்பிடித்தல், மன உறுதியை வளர்த்துக் கொள்ளுதல் மற்றும் நோயாளிகளிடையே பரஸ்பர புரிதல் மற்றும் ஊக்கத்தை மேம்படுத்துதல் ஆகியவை இதில் வலியுறுத்தப் பட்டன.

இந்நிகழ்ச்சிக்கு ஜிப்மர் இரைப்பை குடலியல் துறை தலைவர் பழனிவேல் மோகன் தலைமை வகித்தார். குடல் அழற்சி நோயின் அறிகுறிகள் மற்றும் அதன் தாக்கம், நோயைத் தூண்டும் காரணிகள், வாழ்க்கை முறை மாற்றங்கள் மற்றும் நவீன சிகிச்சை முறைகள் குறித்து இத் துறையின் கூடுதல் பேராசிரியர் செந்தமிழ்ச் செல்வன் விரிவாக எடுத்துரைத்தார்.

ஜிப்மர் மனநலத் துறையின் மருத்துவ உளவியலாளர் அறிவழகன், இரைப்பை குடலியல் துறையின் உணவியல் நிபுணர் ரமா பிரபா, மருத்துவ சமூகப் பணியாளர் ஹெனா மெல்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழிப்புணர்வு, யோகா செயல் விளக்கக் காணொலியும் நிகழ்ச்சியில் இடம் பெற்றன.

தினமலர் (75)
தேசிய தமிழ் நாளிதழ்

குடல் அழற்சி நோயாளிகளுக்கு முழுமையான பராமரிப்பு அவசியம்: ஜிப்மரில் கூட்டத்தில் அட்வஸ்

UPDATED : செப் 08, 2026 03:36 PM
ADDED : செப் 08, 2026 03:31 PM

புதுச்சேரி: ஜிப்மர் மருத்துவமனையில் குடல் அழற்சி நோயாளிகளுக்கான காலாண்டு கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

இரைப்பை குடலியல் துறைத் தலைவர் பழனிவேல் மோகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பல்வேறு துறை நிபுணர்கள் உரையாற்றினர்:கூடுதல் பேராசிரியர் செந்தமிழ்ச் செல்வன், நோயின் அறிகுறிகள், தூண்டும் காரணிகள் மற்றும் நவீன சிகிச்சைகள் குறித்து விளக்கினார்.

மருத்துவ உளவியலாளர் அறிவழகன், குடல்-மூளை தொடர்பு மற்றும் மன அழுத்தத்தை கையாளுதல் குறித்து விவரித்தார். உணவியல் நிபுணர் ரமா பிரபா, நோயாளிகள் பின்பற்ற வேண்டிய உணவுமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

சிறப்பு அமர்வில்,கிரோன்ஸ் நோய் மற்றும் அல்சரேட்டிவ் கொலைட்டிஸ் போன்ற குடல் அழற்சி நோய்கள், ஒருவரின் உடல் நலம், ஊட்டச்சத்து மற்றும் மனநலத்தைப் பாதிக்கக்கூடியவை. இதற்கு நீண்டகால சிகிச்சையும் கண்காணிப்பும் தேவைப்படுவதால், முறையான விழிப்புணர்வும் வாழ்க்கைமுறை மாற்றங்களும் அவசியம் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜிப்மர் மருத்துவ இரைப்பை குடலியல் துறை சார்பில் நடந்த இக்கூட்டத்தில், ஏராளமான நோயாளிகள், அவர்களது குடும்பத்தினர் பங்கேற்று விளக்கம் பெற்றனர்.

Link: https://www.dinamalar.com/news/puducherry/intestinal-inflammatory-patients-need-thorough-care-advice-at-jipmer-meeting/4317236